அமைச்சர்களுடன் நடந்த பேச்சுவார்த்தையில் சில முக்கிய வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. அதன்படி, அடுத்த மாதம் முதல் தூய்மைப் பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.50 உணவுப்படி வழங்கப்படும். பெண் தூய்மைப் பணியாளர்களுக்காக சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளிலும் இந்த மாத இறுதிக்குள் கழிவறை மற்றும் ஓய்வறைகள் அமைக்கப்படும். போராட்டத்தின்போது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்படும். 4, 7, 8 ஆகிய மண்டலங்களுக்கு ஒரு மாதத்திற்குள் 160 புதிய பேட்டரி வாகனங்கள் வழங்கப்படும். உயிரிழக்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு இழப்பீடு, பணியின்போது ரெயின்கோட், கையுறை, மாஸ்க் வழங்கப்படும். 2 மாதத்திற்கு ஒருமுறை குறைதீர்ப்பு கூட்டம் நடத்தப்படும் என கூறியுள்ளனர்.

மேலும், ஊதிய உயர்வு, மகப்பேறு விடுப்பு போன்ற முக்கிய கோரிக்கைகள் குறித்து அடுத்த மாதம் 3– ந் தேதி நடை பெறும் அடுத்தகட்ட கூட்டத்தில் நல்ல முடிவு அறிவிக்கப்படும் என கூறியுள்ளனர். எனவே, அதுவரை எங்கள் போராட் டம் தற்காலிகமாக வாபஸ் பெறப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து, அமைச்சர் ராஜ்மோகன் பேசுகையில், "தூய்மை பணியை கைவிடாமல், பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்காமல் போராடியதற்கு தூய்மைப் பணியாளர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு மாதத்தில் செய்து தருவதாக கூறிய வாக்குறுதிகள் முறையாக நடக்கிறதா? என்பதை நானே நேரில் சென்று பார்வையிடுவேன். இன்றைய கூட்டத்தில் 8 முதல் 10 கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதற்கான அரசு ஆணை விரைவில் வரும்" என்றார்.

மதுராந்தகம் ஏரி தூர்வாரும் பணி: கலெக்டர் தொடங்கி வைத்தார்

மதுராந்தகம், செப்.5–

முதல்– அமைச்சர் விஜய் உத்தரவின்படி, நீர்வளத்துறை மற்றும் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியில் செங்கல் பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஏரியை தூர்வாரி, அதன் அசல் நீர்த்தேக்க கொள்ளளவை மீட்டெடுக்கும் பணிகளை மாவட்ட கலெக்டர் வீரப்பன் தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ் குமார் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

மதுராந்தகம் ஏரியில் உள்ள சீமைக்கருவேல மரங்களை பொதுப்பணித்துறை அதிகாரிகள் பொக்லைன் எந்திரம் மூலம் வேருடன் அகற்றினர்.

homefirst We'll take you home

Home First Finance Company India Limited
CIN: L65990MH2010PLC240703, Website: homefirstindia.com
Phone No.: 18003008425 Email ID: loanfirst@homefirstindia.com

பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரராகிய நீங்கள் அட்டவணையில் குறிப்பிடப்படப்பட்டுள்ள சொத்தை அடமானம் வைத்ததன் மூலம் கடனைப் பெற்றுள்ளீர்கள். மேலும் கடன் ஒப்பந்தத்திற்காக கடன்தாரர்/இணை கடன்தாரர் என நீங்கள் கீழே குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் வாங்கிய கடன் தொகையை திரும்ப செலுத்த தவறியதன் விளைவாக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (சுருக்கமாக SARFAESI சட்டம்) உங்கள் கடன் கணக்கு **03-09-2026** அன்று செயல்படாத சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆகிய நாங்கள், நீங்கள் வழங்கிய முகவரிக்கு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(13) மற்றும் பிரிவு13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளோம். **03-09-2026** அன்று மேற்சொன்ன அறிவிப்புகள் வெளியிடப்பட்டது மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு கடன்களை திரும்ப செலுத்துவதிலிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள் என்று மேற்சொன்ன அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. எனவே, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன்படி அறிவிப்பு வழங்குவதற்காக தற்போதைய வெளியீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வ. எண்	கணக்கு, கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி	செயல்படுத்தப்பட வேண்டிய பத்திரங்களின் விவரங்கள்	கோரிக்கை அறிவிப்பு தேதியன்று பாக்கித் தொகை மற்றும் மேலும் வட்டி, இதர செலவினங்கள் (ரூபாயில்)
1	பாபு வி, பி ஹேமாவதி	பிளாட்–98, பிளாக் / கட்டட எண். – 98, பிளாக்/கட்டடத்தின் பெயர்– சாந்தி நகர் ஃபேஸ் II, –, பாபு / செகோ, மனை எண்.98, பழைய எஸ்.எண்.693/3A, எஸ்.எண்.693/3A1, புதிய எஸ்.எண்.693/3A1A & பழைய எஸ்.எண்.693/4, புதிய எஸ்.எண்.693/4A, பட்டா எண்.5004–ன் படி, உட்பிரிவு புதிய எஸ்.எண்கள்.639/11 & எஸ்.எண்.693/12 பரப்பளவு 881 சதுர அடி, "குமரன் நகர் ஃபேஸ் I", தேர்வழி கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர், திருவள்ளூர், தமிழ்நாடு– 601201, எல்லைகள்: கிழக்கு– மனை, மேற்கு– மனை, வடக்கு–மனை, தெற்கு–சாலை	2,773,467
2	சிலையன் ஜி, எல்லம்மாள் செல்லையப்பன்	வீடு– 1662/31, சிலையனுக்கு சொந்தமான மனை + செகோ, பழைய எஸ்.எண்.900/1A, பட்டா படி புதிய எஸ். எண்.1662/31, 1205 சதுர அடி (112 சதுர மீட்டர்) பரப்பளவு கொண்டது, ஒத்தவாடை தெரு, எர்ணாகுப்பம் கிராமம், ஊத்துக்கோட்டை தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்., திருவள்ளூர், தமிழ்நாடு– 601102, எல்லைகள்: கிழக்கு– திருமதி செல்வி ராஜாவுக்கு சொந்தமான மனை, மேற்கு– கோட்டி மனை, வடக்கு– மீதமுள்ள மனை & ஊராட்சி சாலை, தெற்கு– ஊராட்சி சாலை	1,604,434
3	ஏழுமலை கோவிந்தராஜ், கோடீஸ்வரி ஏழுமலை	வீடு– மனை எண்: 89, பிளாக் / கட்டட எண். – மனை எண்: 89, –, பிராப்பர்ட்டி ஃபேஸ்– I, ஏழுமலை – வாங்கியது, மனை எண்.89 தெற்குப் பகுதி, பழைய எஸ்.எண்கள்.94/9A&95/2AA1A1AA1, பட்டா எண்.7808–ன் படி புதிய எஸ்.எண்கள்.94/9A2 & 95/58, 1200 சதுர அடியில் 600 சதுர அடி பரப்பளவு கொண்டது, "சப்தகிரி நகர்"–ல் அமைந்துள்ளது, அங்கீகார எண்.2/2005, மருதவல்லிபுரம் குரூப், திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு– 631210, எல்லைகள்: கிழக்கு– 30 அடி சாலை, மேற்கு– மனை எண் 88, வடக்கு– மனை எண் 89– ன் பகுதி, தெற்கு– 23 அடி சாலை	1,095,312
4	ஜெ சண்முகம், சரஸ்வதி எஸ்	வீடு– 34/73, சண்முகம் லேப் + செகோ, பழைய நத்தம் எஸ்.எஃப்.எண்: 34/1B4, புதிய நத்தம் எஸ்.எஃப்.எண்: 34/73, பட்டா எண்: 1052, தண்டராம்பட்டு கிராமம், தண்டராம்பட்டு சார்பதிவாளர் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, தமிழ்நாடு–606707, எல்லைகள்: கிழக்கு–பலராமனுக்குச் சொந்தமான சொத்து, மேற்கு–வள்ளிக்குச் சொந்தமான சொத்து, வடக்கு–தெரு, தெற்கு– கண்ணனுக்குச் சொந்தமான சொத்து	1,009,600
5	கே ராமச்சந்திரா, முனியம்மாள் கேசவன்,	வீடு– 8, ராமச்சந்திரன் செகோ வேலூர், எஸ்.எண்.223/2A6, புதிய எஸ்.எண்.223/15, மனை.எண்.8, தேவிசெட்டிகுப்பம் மதுரா ஆண்டிகோட்டை கிராமம், வேலூர் மாவட்டம்., வேலூர், தமிழ்நாடு– 632107, எல்லைகள்: கிழக்கு– மனை.எண்.9, மேற்கு–மனை.எண்.7, வடக்கு– சாலை, தெற்கு– மனை.எண்.15	996,292
6	முருகன் பி, ஜீவிதா எம்,	வீடு–எண் 2 மேற்கு, முருகன் எல்.ஏ.பி (LAP), எண்.2 (மேற்குப் பகுதி), எஸ்.எண்.156, 1000 சதுர அடி பரப்பளவு கொண்டது, "கே.கே நகர்"– ல் அமைந்துள்ள மேற்குப் பகுதி, தொரப்பாடி கிராமம், வேலூர் தாலுகா, வேலூர் மாவட்டம், வேலூர், தமிழ்நாடு– 632001, எல்லைகள்: கிழக்கு– திரு. பி. அருணுக்குச் சொந்தமான சொத்து (கிழக்குப் பகுதி), மேற்கு– பொதுப் பாதை, வடக்கு– 20 அடி அகல சாலை, தெற்கு– திரு. ஜி. சந்திரசேகருக்குச் சொந்தமான சொத்து	863,576
7	முருகேசன் கண்ணன், நாகதா முருகேசன்,	பிளாட்– 220/8, –, பிளாக்/கட்டடத்தின் பெயர்– கொண்டமங்கலம், –, முருகேசன் /செகோ, கிராம நத்தம் பழைய எஸ்.எண்.220/8, புதிய எஸ்.எண்.220/28, கொண்டமங்கலம் கிராமம், செங்கல்பட்டு இணை II சார்பதிவாளர் அலுவலகம், செங்கல்பட்டு தாலுகா & மாவட்டம்– 603209, செங்கல்பட்டு, தமிழ்நாடு– 603209, எல்லைகள்: கிழக்கு– தேவகி வீடு, மேற்கு– சாலை, வடக்கு– ருத்திரகோட்டை, தெற்கு– விஜயா வீடு	201,088
8	ரவி பி, விஜயலட்சுமி ஆர்,	வீடு– C– 5, ரவி/எல்.ஏ.பி (Lap), மனை எண்.C– 5, எஸ்.எண்.46/1 & 47 புதிய எஸ்.எண்.46/3, "ஸ்ரீ மகாலட்சுமி நகர் அனெக்ஸ்" சி.எம்.டி.ஏ (C.M.D.A) வரன்முறைப்படுத்தல் ஒப்புதல் ஆணை எண்.1176/2009, கொழுமணிவாக்கம் கிராமம், பல்லாவரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், தமிழ்நாடு– 600122, எல்லைகள்: கிழக்கு– மனை எண்.C6, மேற்கு– மனை எண்.C4, வடக்கு– 20 அடி சாலை, தெற்கு– மனை எண்.D2	1,863,901
9	சண்முகம் கே, முருகம்மாள் கே	வீடு– மனை எண்.109, சண்முகம் செகோ, மனை எண்.109, எஸ்.எண்.261, 262/1– ல் அடங்கியது, பட்டா படி புதிய எஸ்.எண்.261/15, "ஸ்ரீ அஷ்டலட்சுமி நகர்", எண்.121, பெருங்காவூர் கிராமம், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம்., திருவள்ளூர், தமிழ்நாடு– 600072, எல்லைகள்: கிழக்கு– மனை எண்.108, மேற்கு– மனை எண்.110, வடக்கு– மனை எண்.112, தெற்கு– 20 அடி அகல சாலை	1,240,450
10	சிவா அயோத்தி, பத்மாவதி சிவா,	வீடு– 1059/3, சிவா செகோ, கிராம நத்தம் எஸ்.எண்: 312/1A1, புதிய எஸ்.எண்: 1059/3, கரப்பட்டு கிராமம், செங்கம் தாலுகா, கடலாடி சார்பதிவாளர் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம்., திருவண்ணாமலை, தமிழ்நாடு– 606705, எல்லைகள்: கிழக்கு– திரு. கார்த்தி நிலம், மேற்கு– திரு. முத்து கவுண்டர் சொத்து, வடக்கு– பிராமண தெரு, தெற்கு– திரு. ரவியின் மீதமுள்ள நிலம்	782,011

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய மேற்கூறிய தொகை மற்றும் வட்டியை இந்த அறிவிப்பை வெளியிட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்த நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்தல் உள்பட ஏதாவது அல்லது அனைத்து ஈடுபெற்ற சொத்துகளுக்கு எதிராக சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கையை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் மேற்கொள்ளும். (1) குத்தகை மூலம் மாற்றுவதற்கான உரிமைகள், ஈடுபெற்ற சொத்துக்களை விடுவிக்க விற்பனை ஒதுக்கீடு உள்பட கடன்தாரர்கள்/உத்தரவாததாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் உரிமை (2) குத்தகை, ஒதுக்கீடு அல்லது விற்பனை மற்றும் ஈடுபெற்ற சொத்துக்களை விடுவித்தல் மற்றும் உங்களால் மாற்றப்பட்ட ஈடுபெற்ற சொத்துக்கள் தொடர்பான அனைத்து உரிமைகள் கொண்டு ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டினால் ஈடுபெற்ற சொத்துக்களை மாற்றுதல் உள்பட ஈடுபெற்ற சொத்துக்களின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றை உள்ளடக்கி நடவடிக்கை மேற்கொள்ள மேற்சொன்ன சட்டத்தின் கீழ் ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது.

மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி, ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் முன் அனுமதியின்றி ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள எந்த ஒரு ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் வர்த்தகம் மேற்கொள்வதன் மூலம் (உங்கள் வணிகத்தின் சாதாரண போக்கைத் தவிர) மாற்றல் போன்றவற்றை மேற்கொள்ள உங்களுக்கு இதன் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இடம் : சென்னை
தேதி : 05-09-2026

கையொப்பம்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்

இத்தாலியின் நீண்ட கால பிரதமராக மெலோனி சாதனை: பிரதமர் மோடி வாழ்த்து

புதுடில்லி, செப்.5–

இத்தாலியில் இரண்டாம் உலகப் போருக்கு பிந்தைய காலத்தில், தொடர்ந்து அதிக நாட்கள் பிரதமராக பதவி வகித்தவர் என்ற சாதனையை அந்நாட்டு பிரதமர் ஜார்ஜியா மெலோனி (49) படைத்துள்ளார். அவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடான இத்தாலியில் 2022 முதல் 'பிரதர்ஸ் ஆப் இத்தாலி' கட்சியின் தலைவர் ஜார்ஜியா மெலோனி, பிரதமராக பதவி வகிக்கிறார். நேற்று முன்தினம் பிரதமராக, 1,413 நாட்களை நிறைவு செய்தார். இதன் மூலம், இரண்டாம் உலகப் போருக்கு பின், தொடர்ந்து இத்தாலியில் அதிக நாட்கள் பிரதமராக பதவி வகித்தவர் என்ற பெருமையை அவர் பெற்றார். இத்தாலியின் முதல் பெண் பிரதமரும் இவரே.

இதற்காக மெலோனிக்கு வாழ்த்து தெரிவித்து, சமூக வலைதளத்தில் பிரதமர் மோடி வெளியிட்ட பதிவு:–

போருக்கு பிந்தைய இத்தாலியின் வரலாற்றில், தொடர்ந்து அதிக நாட்கள் பிரதமராக பதவி வகித்துள்ள என் நண்பர் மெலோனிக்கு வாழ்த்துகள். இந்த சாதனை, இத்தாலி மக்கள் அவரது தலைமை மீது வைத்துள்ள நம்பிக்கையையும், உறுதியையும் பிரதிபலிக்கிறது.

மெலோனி உடனான நட்பு, இந்தியா – இத்தாலி இடையிலான சிறப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. இரு நாடுகளின் மக்களுக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்க தொடர்ந்து நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்படுவதை எதிர்பார்க்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இதற்கு மெலோனி நன்றி தெரிவித்துள்ளார்.

POEL

பிஓசிஎல் எண்டர்பிரைசஸ் லிமிடெட்

CIN : L52599TN1988PLC015731

பதிவு அலுவலகம் : வெல்லிங்டன் கிரசண்ட், முதல் மாடி, எண்.6/2, பைகிராப்ட்ஸ் கார்டன் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600006. தொலைபேசி : +91 - 44 - 4914 5454.
மின்னஞ்சல் : corprelations@poel.in; இணையதளம் : www.poel.in

38வது வருடாந்திர பொதுக்கூட்டம் பற்றிய அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய தகவல்கள்

கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய பிரிவுகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகள் மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட ஏப்ரல் 8, 2020, ஏப்ரல் 13, 2020, மே 5, 2020, ஜனவரி 13, 2021, டிசம்பர் 8, 2021, டிசம்பர் 14, 2021, மே 5, 2022, டிசம்பர் 28, 2022, செப்டம்பர் 25, 2023, செப்டம்பர் 19, 2024 மற்றும் செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட பொது சுற்றறிக்கைகள் (''எம்சிஏ சுற்றறிக்கைகள்'') மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியாவினால் வெளியிடப்பட்ட மே 12, 2020, ஜனவரி 15, 2021, மே 13, 2022, ஜனவரி 5, 2023, அக்டோபர் 7, 2023 மற்றும் அக்டோபர் 3, 2024 தேதியிட்ட சுற்றறிக்கைகள் ('செபி சுற்றறிக்கை')ன்படி, **POCL எண்டர்பிரைசஸ் லிமிடெட்டின்** ('கம்பெனி') 38வது வருடாந்திர பொதுக்கூட்டம் ('AGM') காணொளி காட்சி (VC) / இதர ஒளி ஒலி சாதனங்கள் (OAVM) மூலமாக வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வர்த்தகம் குறித்து பரிவர்த்தனை மேற்கொள்வதற்காக வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 28, 2026 அன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு மற்றும் 2025-26ம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ஆகியவற்றை அனைத்து பங்குதாரர்களுக்கும் மின்னணு முறையில் அனுப்பும் பணியை கம்பெனி வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 4, 2026 அன்று நிறைவு செய்துள்ளது. மேலும், செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதிமுறை 36(1)(b)ன்படி நிறுவனம் / RTA / DPகளில் தங்கள் மின்னஞ்சல் முகவிரகளைப் பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு, 2025-26 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கை மற்றும் வருடாந்திர அறிவிப்பை அணுகுவதற்கான இணைய இணைப்பு மற்றும் சரியான பாதையுடன் கூடிய கடிதத்தையும் நிறுவனம் அனுப்பியுள்ளது.

வருடாந்திர அறிக்கையைப் பெறுவதற்கும், வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வாக்களிப்பு மூலம் வாக்களிப்பதற்கும், தங்கள் மின்னஞ்சல் முகவரியை இதுவரை பதிவு செய்யாத உறுப்பினர்கள் எங்களுடைய RTA-வில் https://investors.cameoindia.com என்ற முகவரியில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 விதிகள் உடன் அதன் கீழ் கட்டமைக்கப்பட்ட விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) ஒழுங்குமுறைகள் 2015, ஒழுங்குமுறை 44ன் கீழ் 38வது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்ற தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்க கம்பெனி சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் உடன் (CDSL) இணைந்து ஏற்பாடு செய்துள்ளது. தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு வசதி, செப்டம்பர் 25, 2026 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) துவக்கி, செப்டம்பர் 27, 2026 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) நிறைவு பெறும். மேற்கண்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்பட மாட்டாது.

கட் ஆப் தேதியான செப்டம்பர் 21, 2026 அன்று உறுப்பினர்கள் பதிவேடு / பயன்பெறும் உரிமையாளர்கள் பதிவேட்டில் பெயர் இடம் பெற்றுள்ள நபர் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது கூட்டம் நடைபெறும்போது மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க தகுதியானவர் ஆவார். வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும்போது கூட்டத்தில் மின்னணு வாக்குப் பதிவு மூலம் வாக்களிக்கும் வசதி வழங்கப்படும். தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு மூலம் வாக்களிக்காத உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக் கூட்டம் நடைபெறும்போது மின்னணு வாக்குப் பதிவு முறையில் வாக்களிக்கலாம். தொலைதூர மின்னணு வாக்குப் பதிவு மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தின்போது வாக்களிப்பது பற்றிய விரிவான வழிமுறைகள் அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளன.

அறிவிப்பு அனுப்பிய பின்னர் கம்பெனியின் பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் மற்றும் கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்துள்ளவர்களும் அறிவிப்பில் கண்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி லாகின் ஐடி மற்றும் பாஸ்வேர்டை உருவாக்க முடியும். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் வாக்களித்த உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும். ஆனால் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

2025-26ம் ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கையுடன் கூடிய வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு ஆகியவை கம்பெனியின் இணையதளம் www.poel.in மற்றும் பாம்பே ஸ்டாக் எக்சேஞ்சின் இணையதளமான www.bseindia.comல் வெளியிடப்பட்டுள்ளது. வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு CDSL-ன் இணையதளம் www.evotingindia.comல் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் குறைகள் / கேள்விகள் இருந்தால் உறுப்பினர்கள், திரு. ஆஷிஷ் குமார் K ஜெயின், கம்பெனியின் செயலாளர் அவர்களை மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களில் தொடர்பு கொள்ளவும்.

பிஓசிஎல் எண்டர்பிரைசஸ் லிமிடெட்டிற்காக
ஆஷிஸ் குமார் K ஜெயின்
கம்பெனி செயலாளர் மற்றும் நிதித் தலைவர்

இடம் : சென்னை
நாள் : 05.09.2026

கடலூர் உதவிச்சீட்டுப் பதிவாளர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை:
திருமதி. த.பாக்கியலட்சுமி, அவர்கள் , சார்பதிவாளர் (சீட்டு & சங்கம்) மற்றும், நியமனதாரர் (நடுவர்) வழக்கு, மாவட்ட பதிவாளர் அலுவலகம், கடலூர்.

மத்தியஸ்தர் வழக்கு எண்: 201/2026
செல்வப்பிரபா சிட்பண்ட்ஸ் (பி) லிட், எண். 29, SPT மணிநகர், காந்திநகர் அஞ்சல், நெய்வேலி.
... மனுதாரர்

1.R.Bharathidasan S/O Rajendiran., No:G1/14, A Block, Block– 1, Mattrukudiyiruppu, Neyveli, Cuddalore Dist,607801(9710436536).
2.A.Lakshmi W/O R.Bharathi Dasan., No:G1/14, Rehabilation Centre,Block– 1,Neyveli,Cuddalorte Dist,607801(9042363760).
3.S.Kamatchi W/O Parthiban., No:3,Arupadai Nagar, S N Chavadi, Kondur, Cuddalore Dist,607002(9791591625).
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மனுதாரர் நாளது 30/03/2026 தேதி வரையிலான தொகை ரூ. 3,22,953/– உங்களிடமிருந்து மனுதாரருக்கு நிலுவையாக சேர வேண்டியது என்று எனது அலுவலகத்தில் 07/05/2026 தேதி அன்று புகார் மனு பெறப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை எனது அலுவலகத்தில் (ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம் எண்.50, சங்கரநாயுடு தெரு, திருப்பாதிரிப்புலியூர், கடலூர்.) 08/09/2026 தேதி அன்று முற்பகல் 11.00 மணிக்கு விசாரணை நடைபெற இருக்கிறது. மேற்படி விசாரணையின் போது மனுதாரருக்கு சேர வேண்டிய தொகையை என் முன்னால் தாங்கள் செலுத்த வேண்டியது எனவும், தங்களுக்கு தொகை சம்மந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் விசாரணையின் போது தெரிவிக்கலாம் எனவும், மேற்படி விசாரணைக்கு வரத் தவறினால் இம்மனு மீது ஒருதலை பட்சமாக (Ex– Parte) தீர்மானிக்கப்படும் எனவும், இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

உதவிச்சீட்டுப்பதிவாளர்
கடலூர்.

கடலூர் உதவிச்சீட்டுப் பதிவாளர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை:
திருமதி. த.பாக்கியலட்சுமி, அவர்கள் , சார்பதிவாளர் (சீட்டு & சங்கம்) மற்றும், நியமனதாரர் (நடுவர்) வழக்கு, மாவட்ட பதிவாளர் அலுவலகம், கடலூர்.

மத்தியஸ்தர் வழக்கு எண்: 197/2026
செல்வப்பிரபா சிட்பண்ட்ஸ் (பி) லிட், எண். 29, SPT மணிநகர், காந்திநகர் அஞ்சல், நெய்வேலி.
... மனுதாரர்

1.S.Nethaji S/O Srinivasan., No:45, Sri Karpaga Vinayagar Nagar, Periyakangananku ppam, Cuddalore Dist,607002 (9843716564).
2.R.Manickam S/O Ravichandran., No:2/4, Melapalayam Road, Panruti, Cuddalore Dist,607106 (9600650135).
3.C.Selladurai S/OChakkarabani., No:47, South Street, Ayekuppam Post, Kurinjipadi T.k, Cuddalore Dist,607301 (8973647087).
4.V.Sankar S/O Vishwanathan., No:2/9, East Street, Valasakaddu Po, Kattumannarkoil Tk, Cuddalore Dist,608701 (6385533523).
...எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

மனுதாரர் நாளது 30/03/2026 தேதி வரையிலான தொகை ரூ. 3,56,595/– உங்களிடமிருந்து மனுதாரருக்கு நிலுவையாக சேர வேண்டியது என்று எனது அலுவலகத்தில் 07/05/2026 தேதி அன்று புகார் மனு பெறப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை எனது அலுவலகத்தில் (ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகம் எண்.50, சங்கரநாயுடு தெரு, திருப்பாதிரிப்புலியூர், கடலூர்.) 08/09/2026 தேதி அன்று முற்பகல் 11.00 மணிக்கு விசாரணை நடைபெற இருக்கிறது. மேற்படி விசாரணையின் போது மனுதாரருக்கு சேர வேண்டிய தொகையை என் முன்னால் தாங்கள் செலுத்த வேண்டியது எனவும், தங்களுக்கு தொகை சம்மந்தமாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் விசாரணையின் போது தெரிவிக்கலாம் எனவும், மேற்படி விசாரணைக்கு வரத் தவறினால் இம்மனு மீது ஒருதலை பட்சமாக (Ex– Parte) தீர்மானிக்கப்படும் எனவும், இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

உதவிச்சீட்டுப்பதிவாளர்
கடலூர்.

MANALI PETROCHEMICALS

மணலி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: ''ஸ்பிக் ஹவுஸ்'', 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை-600 032.

நிபஎ: L24294TN1986PLC013087,
வலைதளம்: www.manalipetro.com
மின்னஞ்சல்: companysecretary@manalipetro.com
தொலைபேசி / தொலைநகல் எண்: 044 - 2235 1098

ஆண்டுப்பேரவைக் கூட்டம் மற்றும் இதர விபரங்கள் குறித்த அறிவிப்பு

நிறுவனத்தின் 40-வது ஆண்டுப்பேரவைக்கூட்டம், **28 செப்டம்பர், 2026** திங்கட்கிழமை அன்று மாலை **5.00 மணிக்கு (இந்திய நேரப்படி)** காணொலிக்காட்சி மூலம் நடைபெறும். இக்கூட்டத்தில், கூட்ட அறிவிக்கையில் கண்டுள்ள சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, மேற்படி கூட்ட அறிவிக்கையும், 2025-26 ஆண்டறிக்கையும் தத்தம் மின்னஞ்சல் முகவரிகளைப்பதிவு செய்து, இவற்றை மின்னணு முறையில் பெற தேர்வு செய்துள்ள உறுப்பினர்களுக்கு 04, செப்டம்பர், 2026 அன்று மின்னணு முறையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவை நிறுவனத்தின், பங்குச்சந்தைகளின் மற்றும் தொலை மின்னணு வாக்குச் சேவையாளரின் பின்வரும் வலைத்தளங்களிலும் கிடைக்கப்பெறும்: www.manalipetro.com, www.bseindia.com, www.nseindia.com & www.evotingindia.com. நிறுவனம் அல்லது RTA-விடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத உறுப்பினர்களுக்கு, அதனை அணுகுவதற்கான இணைப்பு கொண்ட கடிதம் ஒன்று அனுப்பப்படுகிறது.

பேரவைக்கூட்டத்தில் பங்கேற்கவும், பேசுவதற்குமான முறை

பேரவைக்கூட்ட காணொலி நிகழ்வு சென்ட்ரல் டெபாஸிடரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடட் (CDSL) நிறுவனத்தின் இ-வோட்டிங்க் அமைப்பின் மூலம் நடைபெறும். கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான வசதி 28.09.2026 அன்று மாலை 4.45 மணி முதல் 5.15 மணி வரை இருக்கும். இதன் வழி முறைகள் கூட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

கார்பொரேட் விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்டுள்ள பொதுச்சுற்றறிக்கைகள் படி கூட்டத்தில் பங்கு கொள்ள பதிலிகளை நியமிக்கமுடியாது, உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ளலாம்.

கூட்டத்தில் பேசிட விரும்புவோர், காமியோ கார்புரேட் நிறுவனத்தின் வலைதளம் https://investors.cameoindia.com மூலம் திங்கட்கிழமை, 21.09.2026 காலை 9.00 மணி (இந்திய நேரப்படி) முதல் வெள்ளிக்கிழமை, 25.09.2026 மாலை 5.00 மணிக்குள் (இந்திய நேரப்படி) பதிவு செய்து கொள்ளலாம். கூட்டம் நடைபெறும் போதோ, அல்லது இதர வழிகளிலோ பதிவு செய்து கொண்டு பேச வசதி இருக்காது.

கூட்டத்தில் பேச விரும்பாத, ஆனால் அங்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள அலுவல்கள் குறித்து விபரம் வேண்டுவோர் தங்கள் வினாக்களை மின்னஞ்சல் மூலம் companysecretary@manalipetro.com என்ற முகவரிக்கு தங்கள் பெயர், பங்கு விபரங்கள், கைபேசி எண் போன்ற விபரங்களுடன் வெள்ளிக்கிழமை, 25.09.2026க்கு முன்னர் அனுப்பி வைக்கலாம். அவற்றிற்கான விளக்கங்கள் உரிய முறையில் அனுப்பிவைக்கப்படும்

ஈவுத்தொகை உறுதி மற்றும் விநியோகம்

2025-26 ஆண்டுக்கான ஈவுத்தொகை உறுப்பினர்களால் மேற்படி கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டால், செப்டம்பர் 21ம் தேதி அன்று வர்த்தக முடிவு நேரத்தில் பயனாளிகள் பட்டியலில் உள்ள பங்குதாரர்கள், மற்றும் செப்டம்பர் 28ம் தேதி அன்று உறுப்பினர் பதிவேட்டில் உள்ள பங்குதாரர்களுக்கு, குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் வழங்கப்படும்.

01.04.2024 முதல், ஈவுத்தொகை மின்னனு முறையில் மட்டுமே அனுப்பப்படும். குறிப்பிட்ட நேரத்திற்குள் ஈவுத்தொகையினை பெற்றுக்கொள்ள, பங்குதாரர்கள் தத்தம் வங்கி கணக்கு விவரங்களை முன்னதாகவே தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஆணைப் பத்திரங்கள் அனுப்பபட மாட்டாது.

மேலும், மேற்படி ஈவுத்தொகையிலிருந்து வருமானவரிப்பிடித்தம் செய்யப்படும். இது குறித்த மேல் விபரங்களுக்கு கூட்ட அறிவிக்கையைப் பார்க்கவும்.

கூட்டத்திற்கு முன் தொலை மின்னணு வாக்குப்பதிவு

கம்பெனிச் சட்டப் பிரிவு 108 மற்றும் அதன் கீழான விதிமுறைகள் மற்றும் செபி (பட்டியல் கடமைகள் & வெளியீட்டுத் தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் 44ம் கூற்றின்படி, உறுப்பினர்கள் பேரவை கூட்டத்தின் நடவடிக்கைகள் மீது தொலை மின்னணு வாக்குப்பதிவு செய்திட CDSL நிறுவனத்துடன் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொலை மின்னணு வாக்குப்பதிவு செய்வதற்கான முறைகள் கூட்ட அறிவிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 21, 2026 (தகுதி நாள்) அன்று நிறுவனத்தின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டுமே தொலை மின்னணு அல்லது பேரவைக் கூட்ட இடத்தில் வாக்கெடுப்பில் பங்குகொள்ளலாம்.

ஆண்டறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டபின் தகுதி நாளுக்கு முன் உறுப்பினரான நபர்கள் ஆண்டறிக்கையை இணையதளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது கேமியோவை தொடர்பு கொள்ளலாம். மேற்படி நபர்கள் தொலைதூர மின்னணு வாக்களிக்க விரும்பினால், புகுபதிகை விவரங்களை கேமியோவிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செப்டம்பர் 24, 2026 வியாழக்கிழமை காலை 9.00 மணி (இந்திய நேரப்படி) முதல் செப்டம்பர் 27, 2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முடிய (இந்திய நேரப்படி) மின்னணு வாக்குப்பதிவு செய்யலாம். இதன் பிறகு மின்னணு வாக்குப்பதிவு செய்திடும் வசதி இருக்காது. மின்னணு வாக்களிக்காத உறுப்பினர்கள் கூட்ட இடத்தில் வாக்களிக்கலாம். மின்னணு முறையில் வாக்களித்தவர்கள் பேரவை கூட்டத்தில் பங்கு கொள்ளலாம் ஆனால் வாக்களிக்க முடியாது.

வாக்கு முடிவுகள் விதிகளில் குறிப்பிட்டவாறு பங்குச்சந்தைகட்கு அறிவிக்கப்படும் மற்றும் நிறுவனம் மற்றும் CDSL இணையதளங்களில் வெளியிடப்படும்.

மேலும் விளக்கங்கள் பெற

மின்னணு வாக்குப்பதிவு மற்றும் காணொளி மூலம் கூட்டத்தில் பங்கு கொள்ளுதல் மீதான சந்தேக விளக்கம் பெற உறுப்பினர்கள் CDSL-ன் இணையதளத்தில் (www.evotingindia.com) உள்ள கையேட்டையோ, சந்தேக விளக்க வினா விடைகளையோ பார்க்கலாம் அல்லது helpdesk.evoting@cdslindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம். இவ்வகையில், வேறு ஏதேனும் சிரமங்கள் இருந்தால், உறுப்பினர்கள் திரு. ராகேஷ் டால்வி அவர்களை CDSL, 25வது மாடி, மராத்தான் பியுச்சரக்ஸ், மஃபத்லால் மில்ஸ் காம்பௌண்ட், என் எம் ஜோசி மார்க், லோயர் பரேல் (கிழக்கு), மும்பை - 400 013. உதவிமையம்: 1800 21 09911 மின்னஞ்சல்: helpdesk.evoting@cdslindia.com அல்லது கேமியோ நிறுவனத்தையோ அல்லது இவ்வறிக்கையில் கையெழுத்திட்டவரையோ தொடர்பு கொள்ளலாம்.

இயக்குநர் குழு ஆணைப்படி
மணலி பெட்ரோகெமிக்கல்ஸ் லிமிடெட்டிற்காக
க. ஸ்ரீ விக்னேஷ்
நிறுவனச் செயலர்

தேதி : 05.09.2026
இடம் : சென்னை

பங்குதாரர்கள் தங்கள் கோரப்படாத/பணமாக்கப்படாத ஈவுத்தொகையினை மற்றும் இதர அறிவிப்புகளைப் பெற்றுக்கொள்ள, நிறுவனத்திடமோ, எங்கள் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரிடமோ, அல்லது டெபாசிடரி பார்ட்டிசிபன்டிடமோ தங்களின் முகவரி, வங்கிக் கணக்கு சம்பந்தமான மற்றும் KYC விவரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.